# இந்து சாதனம்

சிவமயம்

(HINDU ORGAN)

புத்தகம் : 114 | சுபானுவருஷம் தை - மாசி - 2004 | இதழ் : 7,8,9


## சைவ பரிபாலன சபை யாழ்ப்பாணம்

# சைவ மகாநாடு

**05.03.2004 - 07.03.2004**

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பெற்ற மிகப் பழைமை வாய்ந்த சைவசமய நிறுவனமாகிய சைவாரிபாலன சபை சைவசமய வளர்ச்சிக்கு 1888 ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு பணிகளை ஆற்றி வருவதைச் சைவப்பெருமக்கள் நன்கறிவர்.

நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சைவப்பாடசாலையை அன்று ஆரம்பித்த சைவப் பெரியார்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இச்சபையானது நூறாண்டுகளாகச் சைவப் பணிசெய்து வருகின்றது.

யாழ்ப்பாணம் நீராவியடியில் நாவலர் ஆச்சிரம மண்டபம் என்றதனைத் தலைமை நிலையமாகக் கொண்டு தனது பணிகளை ஆற்றுகின்றது.

தர்மச் சொத்துக்களைப் பரிபாலித்து அறப்பணிகளை ஆற்றுவதும், சைவப்பிரகாச அச்சியந்திரசாலை நிருவகித்து அன்று தொடங்கி இன்றுவரை சைவசமயச் செய்திப் பத்திரிகையான “இந்துசாதனம்” “Hindu Organ” என்பவற்றை வெளியிட்டுவருவதும், அகில இலங்கைப் பாடசாலை மாணவர்களுக்கு சைவநெறித் தேர்வின் ஆரம்பவகுப்புமுதல் க.பொ.த. (சா.த.) வரையும், இந்துநாகரிகம், இந்துசமயம் ஆகிய பாட முன்னோடித் தேர்வுகளை க.பொ.த. (உ.த.) மாணவர்களுக்கு நடத்தியும், நாவலர் குருபூசைத் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நாவன்மை பேச்சுப்போட்டிகளை நடாத்தியும், புண்ணியநாச்சி அம்மை தினத்தை முன்னிட்டுப் பண்ணிசைப் போட்டிகளை மாணவரிடையே நடத்தியும், உயர்தர சைவசமய அறிவு பெறும் நோக்கோடு சித்தாந்த பால பண்டிதர் பரீட்சைகளையும் வருடந்தோறும் நடாத்தியும் சைவசமய அபிவிருத்திப்பணிகளைப் பல்லாண்டுகளாக நிறைவேற்றிவருகின்றது.

இவற்றைத் தவிர இலங்கைச் சைவமக்களும் தமிழ் நாட்டில் உள்ள சிதம்பரத்து நடராசப் பெருமானைத் தரிசித்து வழிபடச்செல்லும் காலத்து அங்கு சகலவசதிகளுடனும் தங்குவதற்கு ஏற்றமுறையில் சிதம்பரம் மாலை கட்டித் தெருவில் புண்ணியநாச்சியம்மை மடம் நவீன முறையில் புனருத்தாரணஞ் செய்யப்பட்டு 2003 ஆம் ஆண்டு வெகுவிமரிசையாகத் திறப்பு விழாவுடன் அமைத்து சைவ அடியவர்களுக்கு பேருதவி செய்துள்ளது.

மேற்கூறப்பட்ட பணிகளுடன் பல்லாண்டுகளாக வருடாவருடம் நாவலர் ஆச்சிரம மண்டபத்திலே “சைவ மகாநாடு” ஒழுங்குசெய்து சைவப் பேறிஞர்களின் விரிவுரைகள், உபந்நியாசங்கள், பண்ணிசைகளைச் சைவ மக்கள் கேட்டுப் பயன்பெற உதவியுள்ளது. இந்தியாவில் இருந்து சைவத்தமிழ் அறிஞர்கள் இத்தகைய மகாநாடுகளில் பங்குபற்றுவதுடன் இலங்கைச் சைவத்தமிழ் அறிஞர்களும் பங்குபற்றிச் சிறப்பிப்பர்.

கடந்த 1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற சைவ மகாநாட்டின் பின் இவ்வாண்டு எதிர்வரும் 5,6,7-03-2004 நாட்களில் வழமைபோல் சைவமகாநாடு நடைபெற திருவருள் கூடியுள்ளது. நமது நாட்டின் சைவத் தமிழ் அறிஞர்களும் மற்றும் கல்லூரி கலாசாலைகளின் மாணவர்களும் பங்கேற்று நிகழ்ச்சியினை சிறப்புச் செய்ய உள்ளனர். சைவத் தமிழ் அன்பர்கள் தவறாது கலந்து பயன் பெறுமாறு வேண்டுகின்றோம்.

மு.திருஞானசம்பந்தபிள்ளை
செயலாளர், சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்.


உ
சிவமயம்
“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”
சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்
(புண்ணியநாச்சி தரும அறக்கட்டளை)
அகில இலங்கைச்
சைவ மகாநாடு
நாள் : சுபானு வருடம் மாசி 22, 23, 24.
வெள்ளி, சனி, ஞாயிறு
(5, 6, 7-03-2004)
இடம் : சபை நாவலர் ஆச்சிரம மண்டபம், நீராவியடி, யாழ்ப்பாணம்.
சைவாபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வ. கந்தசாமி, தலைவர். | அ. பஞ்சாட்சரம், சமயப்பிரசார அமைச்சர் | மு. திருஞானசம்பந்தபிள்ளை, செயலாளர்

66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்

# மனிதப்பிறவியின் மகத்துவம்

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஒளவையார். ஆகவே இந்த மனிதப் பிறவி மிகவும் மகத்துவம் மிக்க ஒரு புனிதப் பிறவியாகும். இந்த மானிடப் பிறவியை எடுத்த நாங்கள் அதனுடைய அருமையையும் பெருமையையும் உணர்ந்து அதன் புனிதத் தன்மையைப் பேணுதல் வேண்டும். 'கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்' என்று மணிவாசகர் சிவபுராணத்தில் கூறுவது போல், நாம் எத்தனையோ பிறவிகள் எடுத்தெடுத்து இளைத்து விட்டோம் என்பதை அவர் சொல்லாமல் சொல்லுகிறார். அவர் சொல்லும் அழகே தனி.

## மனிதன் மனிதனாக வாழவேண்டும்

ஆகவே மனிதப் பிறவி எடுத்த நாங்கள் முதலில் மானிடராக வாழ்வதற்கு முயலவேண்டும். மனிதன் மனிதனாக வாழவேண்டுமே தவிர மிருகமாக வாழ்தல் கூடாது. வாழ்க்கையில் எத்தனையோ சங்கடங்கள், சஞ்சலங்கள் வந்தாலும் இன்னல்கள், இடையூறுகள் வந்தாலும் துன்பங்கள் துயரங்கள் வந்தாலும் மனித சுபாவத்தை, இயல்பை, தன்மையை இழக்கக்கூடாது. மனிதனுக்குரிய நல்ல குணத்தை மனிதன் எப்போதுமே காப்பாற்றிக் கொள்ளவேண்டும். மிருகமாக மாறி மனித இனத்துக்கே இழிவை ஏற்படுத்தக் கூடாது.

## நல்லதையே செய்யவேண்டும்

நல்லவற்றைச் சிந்தித்து, நல்லவற்றைச் செய்து, நல்ல விதமாகவே வாழவேண்டும் என்று விரும்புகின்ற நல்ல மனம் நமக்கு வரவேண்டும். மனம் போல் தான் வாழ்வும் வரும். 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது',நாம் நல்லபடி வாழத் தலைப்படவேண்டும். அப்போதுதான் நன்மை கிடைக்கும்.

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' என்ற ஒளவையின் பொன்னான வாக்குக்கிணங்க, நாம் எப்போதும் எந்நேரமும் எந்நாளும் நல்லவர்களையே கண்டு, இறைவனின் பேரருட்கருணைத் திறன் வேண்டும் என்று சிவபிரானிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு சிவபெருமானின் திருவருள் நிச்சயம் வேண்டும். ஒருவன் நல்லவன் என்று பெயரெடுக்க நீண்ட நாளாகும். ஆனால் கெட்டவன் என்று பெயர் கேட்க ஒரு சில நிமிடங்களே போதும்! இதை நாம் நன்கு உணர்ந்து நடத்தல் அவசியம்.

## மெய் ஆனால் பொய்

பொய்யான, நிலையற்ற, அழியுந் தன்மை வாய்ந்த, நீர்க்குமிழிக்கு நிகரான எமது உடம்பை நாம் மெய் என்கிறோம். ஆனால் இது பொய். 'காயமே இது பொய்யடா! வெறுங் காற்றடைத்த பையடா' என்ற முதுமொழியில் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கின்றது பாருங்கள்! இதை உணரும்வரை கஷ்டம்தான்.

இந்த உலகில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் என்வீடு, எனது காணி, என்னுடைய செல்வம், என்னுடைய பிள்ளை என்றெல்லாம் சொல்லும் போது இறைவன் நம்மைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரிப்பானாம். 'வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்' என்பதை நாம் மறக்கக் கூடாது. எப்போதும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பர் என்று எண்ணவோ திடமில்லை. எமது தேகம் வெந்தேகம், நாளைக்கிருப்பது சந்தேகம். அழியும் இந்த உடம்பை நம்பவே கூடாது. அது இருக்கும் போதே நல்லதைச் செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்.

எதுவுமே கூட வராது

'காதற்ற ஊசியும் வாராது காணுன் கடைவழிக்கே' என்ற பட்டினத்தார் கூற்று இங்கே நினைவு கூரத்தக்கது. எங்களுடன் எதுவுமே கூட வராது, நாம் செய்த வினைதான் கூடவரும்.

ஆகவே, வாழ்வின் நிலையாமையை உணர்ந்து நாம் இனிமேலாவது முத்தியின்பமாகிய நிலையான வீட்டின்பத்தைப் பெறுவதற்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். அது எப்படிச் சாத்தியமாகும் என்று கேட்கிறீர்களா?

இறை தொண்டும் இறை தியானமுமே இதற்கு நல்லதோர் உபாயமாகும். நாவுக்கரசர் பெருமானின் வாழ்க்கையை எடுத்துப் பார்த்தால் நமக்கு வழி கிடைத்துவிடும். அவர் நமது ஒவ்வோர் அங்கங்களுக்கும் வேலை கொடுக்கின்றார்.

அப்பர் பாடிய 'திருவங்கமாலை' யில் வாயே வாழ்த்து கண்டாய் என்றும், கண்காள் காண்மின்களோ என்றும் மூக்கே நீ முகராய் என்றும் செவிகாள் கேண்மின்களோ என்றும் கூறி எமது இன்னோன்ன அனைத்து உறுப்புகளும் சிவபெருமானுக்குச் சேவைசெய்யும் வகையை எடுத்தியம்பியிருக்கின்றார். எனவே நாங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் அம்மைக்கும் நன்மை தரக்கூடிய வகையில் உயிர் வாழும்போதே உயர்ந்த இலட்சிய நோக்கோடு எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும். அதுதான் சிறந்த வழி. இதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## வாழ்க்கையின் இலட்சியம்

'குறிக்கோள் இல்லாது கெட்டேனே' என்றார் நாவுக்கரசர். ஆகவே மனித வாழ்வில் ஓர் இலட்சியம் குறிக்கோள், நோக்கம் மிகமிக இன்றியமையாதது. நாங்கள் நல்லதோர் இலட்சியப் பாதையிலே நடைபோட வேண்டும். எமது குடும்பம் என்ற பாரவண்டியைக் கணவன், மனைவி

என்ற மாடுகள் இழுத்துச் செல்ல வேண்டும். துன்பங்கள் போன்ற கரடு முரடுகளும் துயரங்கள் போன்ற மேடு பள்ளங்களும் அந்தப் பாதையில் இருக்கத்தான் செய்யும் ஆனால் அதைக் கண்டு மிரண்டுவிடாமல் பரங்கருணைத் தடங்கடலாகிய பரமேஸ்வரனின் திருவருள் துணைகொண்டு அத்தனையையும் எதிர்நீச்சல் போட்டு அடித்து விரட்டிச் சென்றுவிடவேண்டும். அப்போதுதான் நாம் வெற்றி வாகை சூடலாம்.

முத்திக்கு வழி

இவை எல்லாவற்றிற்கும் இறை தொண்டும் தியானமுமே வழிவகுக்க வல்லன. எவ்வித இடையூறுகளும் இன்றி வாழ்க்கைப் பயணம் சுலபமாகவும் சுமுகமாகவும் இருக்க இறைவன் திருவருள்புரிவான். அவனுடைய அருட்பிரவாகத்தை முன்னுக்கு விட்டு நாம் பின்னே சென்றால் வருகின்ற துன்பங்கள், துயரங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல விலகிவிடும். வாழ்க்கை வண்டி சுலபமாக நகரும்; முத்திப் பேறும் கிட்டும்.

'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்றபடி இறைவன் நம்மை ஆட்டுவிக்கின்றான் நாம் ஆடுகின்றோம். அவன் ஆடாவிட்டால் எல்லாமே நின்று விடும். அவனருளாலேயே அவன் தாள் வணங்க வேண்டும். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' இதை நாம் நினைவிற் கொள்ளுதல் அத்தியாவசியமாகும்.

எனவே, இதுகாறும் போனது போகட்டும், இனியாவது நாம் புண்ணியத்தைச் செய்து பாவத்தை விலக்கி திருவருள் நலத்தினால் நல்லவற்றை மட்டும் செய்து எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபிரானின் பேரருட் கருணைக்குப் பாத்திரமாகி சதுர்வித புருஷார்த்தங்களையும் பெற்று மனிதப்பிறவி எடுத்ததன் மாண்பினைப் பேணியவர்களாவோமாக.

சைவப்புலவர்
- இராசையா ஸ்ரீதரன்

## உருவவழிபாட்டில் சிவலிங்கத்தின் சிறப்பு



சிவலிங்கம் சிவபெருமானைக் காணுவதற்குரிய அடையாளம். லிங்கம் ஸ்ரீ லிங்கம். லிம் - உலக முடிவில் எல்லா சராசரங்களும் லயிப்பதற்குரிய இடம். கம் - அவ்வாறு லயித்த பொருட்கள் அனைத்தும் அதிலிருந்தே வெளிப்படுவது.

லிங்கத்தின் அடிப்பாகம் நாற்கோணமாக இருக்கும். அது பிரம்மபாகம். நடுப்பாகம் எண்கோணமாக இருக்கும். இது ஆவுடைய என்ற பீடத்துக்குள் அமைந்திருக்கும். இது விஷ்ணுபாகம். மேற்பாகம் ருத்ரபாகம். எனவே மும்மூர்த்திகளின் உள்ளடக்கமே லிங்கமாகும். இதுவே சிவலிங்கத்தின் தனிச்சிறப்பு.

-ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் 'பொன்மலர்' இதழிலிருந்து.

## சைவ பரிபாலன சபையாரால் 08.02.2004 ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்

### கீழ்ப்பிரிவு

| | |
|---|---|
| செல்வி ஜானகி ஜெயச்சந்திரன். யா/யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை | 1ஆம் இடம் |
| செல்வி கே. வர்சினி. யா/தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி | 2ஆம் இடம் |
| செல்வி வி. தர்ஷனா. யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் | 3ஆம் இடம் |

### மத்தியபிரிவு

| | |
|---|---|
| செல்வி சங்கீதா சந்திரகுமார். யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி | 1ஆம் இடம் |
| செல்வன் சுந்தரமூர்த்தி தசாங்கன். யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி | 2ஆம் இடம் |
| செல்வன் ப. கீர்த்தனன். யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி | 3ஆம் இடம் |

### மேற்பிரிவு

| | |
|---|---|
| செல்வி தெ. பவனுஜா. யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | 1ஆம் இடம் |
| செல்வி ஜெ. வைஷ்ணவி. யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை | 2ஆம் இடம் |
| செல்வன் குலேந்திரன் ஜெகதீசன். யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி | 3ஆம் இடம் |

| | |
|---|---|
| முதலாம் பரிசு | தங்கப் பதக்கம் |
| இரண்டாம் பரிசு | வெள்ளிப் பதக்கம் |
| மூன்றாம் பரிசு | வெண்கலப் பதக்கம் |



உ
திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்


இந்து சாதனம்
(HINDU-ORGAN)
சுபானுவருஷம் தை - மாசி [05-03-2004]

# இது தான் தருணம்...

"வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல்" என்று வடக்கிலும் தெற்கிலும் கணிப்பிடப் பட்டிருக்கும் தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. "சமாதானம்" தான் சாந்தி தரத் தக்கது. நாங்கள்தான் சமாதானத்தின் தூதுவர்கள் என்று அரசியல் ஆர்ப்பாட்டம் தெற்கில் மேலோங்கி நிற்கின்றது. பௌத்த மதத்தையும் சிங்கள தேசத்தையும் பாதுகாக்க போர்க் கொடி (அரசியல்) தூக்கிப் பெருமெடுப்பில சர்ச்சைக்குள்ளாக்கி வருகின்ற இளம் பிக்குகள் எமது சைவத்திற்கும் இனத்திற்கும் அபாயமானவோர்களோ என்று நம்மவர் சிந்திக்கின்றார்கள். இத்தேர்தல் முடிவுகள் தமிழ் மக்களை எவ்வாறு பாதிக்கும்? என்பதையும், சைவத்தமிழ் மக்கள் பேரினவாத அரசியலால் எத்தகைய பாதிப் படைவார்கள்? என்பதையும் நாம் நிச்சயம் சிந்திக்கத்தான் வேண்டும். எமது சமயம் அன்புச் சமயம் அமைதியையும் அடக்கத்தையும் கொண்ட சமயம் என்று கூறிக்கொண்டு நாம் கண்மூடிக் கொண்டிருப்பது நியாயமற்றது. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற நாவுக்கரசரும், பரமசமய கோளரியான ஞானசம்பந்தரும் நல்லநகர் வல்லவர் ஆறுமுகநாவலரும் எமக்கு நல்ல வழிகாட்டிகளாவர். பாண்டிமாதேவி பாலறாவாயரை போற்றி அழைத்தது எதற்காக? சமணர்களின் ஆணவத்தை அடக்கி சைவத்தை மேன்மையுறச் செய்வதற்காகவே! ஈழத்தமிழர் வரலாற்றில் இது மிக முக்கியமான காலகட்டம். சைவத்தமிழ் மக்கள் ஒன்றுபட்டு துடித்தெழ வேண்டிய காலப்பகுதி. இந்நாட்டில் நமது வலிமையை வரிந்துகட்டிக்கொண்டு காட்ட வேண்டும். ஆயினும் எம்மிடையே வலிமையான சைவசமய ஸ்தாபனம் எதுவுமே இல்லை. தங்களை சைவத்தமிழ் தலைவர்கள், தொண்டர்கள் என்று மார்தட்டிச் சொல்வதற்கும் ஆளில்லாத அவலநிலை. தெற்கிலே பௌத்த மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்திலே வடக்கிலே சைவ மறுமலர்ச்சி தோன்றியது என்பது வரலாற்று உண்மையாகும். இப்போது மீண்டும் "பௌத்த வாதம்" தெற்கிலே எழுச்சி பெறுகின்றது. இடிக்கப்பட்ட இந்து ஆலயங்கள், அழிக்கப்பட் எமது பெருமைமிக்க கோயில்கள், சென்று வழிபாடு செய்யமுடியாத நிலையில் உள்ள எமது கோயில்கள் - நினைக்க நினைக்க நெஞ்சம் குமுறுகின்றது. நகுலேஸ்வரம், மாவிட்ட புரம், திருக்கேதீஸ்வரம் என்பவை பெரிய தலங்களாகும். கதிர்காமம் எம்மிடம் இருந்து பறித்தெடுக்கப் பட்ட தலம். திருக்கோணேஸ்வரம் செல்வது, வழிபடுவது என்பதும் உண்மையில் எமது கையில் இல்லாத வேதனை. இதனை எல்லாம் ஏன் உரத்த குரலில் கண்டிக்க முடியாது நிற்கின்றோம்? காணிநிலம் வேண்டும் என்று பாடினார் பாரதி. எமது சொந்த மண்ணை எமக்குத்தா என்று நாம் ஏன் ஒரே குரலில் முழங்கவில்லை? தென்மராட்சியில் பூசனை அற்று பூட்டிக்கிடக்கும் கோயில்களை மீட்டுத்தா எம் இறைவா? என்று ஏன் நாம் பலமாகக் கேட்க முடியவில்லை.....? கோயில்கள் தோறும் -வெள்ளிக்கிழமைகளில் நாம் ஏன்இதுபற்றி எடுத்துக் கூறக்கூடாது. திருவிழாக்களின் மையங்களாக மட்டுமே கோயில்கள் என்ற போலிநிலை தகர்க்கப்பட வேண்டும். கலை, கலாச்சார காவலர்களாக, தமிழ்மொழி வளர்க்கும் ஆலயங்களாக, சமுதாய நலனுக்காக நலிந்த எமது மக்களின் சமூக விடிவிற்காக - உரக்கக் குரல் கொடுத்து துடிப்புடன் செயற்படும் சமய சமூக மையங்களாக எமது கோயில்கள் மாறவேண்டும். ஊர்க்கோயில்கள் மக்களின் மறுமலர்ச்சிக்காக உழைக்கும் உயர்ந்த லட்சியங்களுடைய கோயில்களாகவேண்டும். எமது சைவத்தமிழ் இனத்திற்கு தோள்கொடுக்கும் இளைய தலைமுறை அவர்களுக்கு வழிகாட்டி அரவணைக்கும் பெரியோர்கள் என்று கோவிலிலும் தொண்டர் படை திரளவேண்டும். இக்கோயிலில் செய்யப்படும் செயற்பாடுகள் வேண்டுகோள்கள் கோயிலைச் சார்ந்த அடியார்களால் உவந்தேற்கப் படும் உயரிய சூழ்நிலை உருவாக்கப் படவேண்டும். ஆலயங்களின் ஒன்றிணைப்பு மிகமிக அவசியமாகின்றது. பிரதேசசெயலக பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு 'கோயில்களின் பிரதேச

(தொடர்ச்சி 05 ஆம் பக்கம்)

# வாழ்த்துப் பாமாலை



திரு. வி. இராமநாதன் அவர்கள்

திருவாரிப் பொழிபுங்கை நகரில் மேவும்
திருமகனாம் விநாசித் தம்பி வாழ்வில்
பெருவாரி யருள்வாரிப் பொழியும் அன்னை
பேரருளால் வந்தமகன் (இ)ராம நாதன்
தருமாரி யெனவாரித் தருமச் சேவை
தரணிதனுக் காற்றிவரு தன்மை யாளன்
அருள்மாரி பொழிசிவனின் ஆசி யாலே
அறுப்பணிகள் பலபுரிந்தே அவனி வாழி.

மடத்துவெளி பாலசுப்ர மண்யன் கோவில்
மாண்புபெற வடிவமைத்து மகிமை தந்தாய்
வடத்தினொடு சித்திரத்தேர் வார்த்தும் நின்றாய்
வாஞ்சையொடு பாலர்விளை யாட வந்தன்
இடத்தினையும் கமலாம்பிகைக் கீந்து வந்தாய்
இல்லமது அச்சகர்க்காய் எழுப்பித் தந்தே
திடத்தனையும் குறையாநற் பூசை காணத்
திருப்பணிகள் பலபுரிந்த செல்வா வாழி.

பெருபத்தி யோடுலகப் போற்றும்
பெருங்கோவி லாதிரைநாட் பூசை கண்டே
இருபத்தி நாலாண்டாய் இறைஞ்சி வந்தாய்
இமயத்து ரிஷிகேசம் பத்ரிகே தாரம்
தருமுத்தி தலங்களெலாம் தரிசித் துவந்தாய்
தவநெறியும் சிவனருளும் தகையப் பெற்றே
குருபத்தி ஆசாரம் குன்றா வாழும்
கோமகனே வாழியநீ பன்னூ றாண்டே.

சிந்தழகு மாலைகட்டித் தெருவின் பாங்கே
சிதம்பரத்து இறைவரது திருப்பா தத்தை
வந்துதொழு மடியவர்கள் வசதி யோங்க
வளமாரும் புண்யநாச்சி மடத்தை அமைத்துத்
தந்தஉன செழுமைமிகு பணியைப் போற்றி
தண்ணெழிலார் பொன்னாடை மாலை சூட்டி
முத்துசைவ பரிபாலன சபையா ரோடு
மகிழன்பாற் தொண்டர்களும் வாழ்த்தி னாரே.

சிதம்பரத்தி லுறையீசன் சீரார் வாழ்த்தும்
செழிசைவ பரிபாலன சபையார் வாழ்த்தும்
நிதம்வரத்து செயுமடியார் நிகரில் வாழ்த்தும்
நின்பணிகண் டுளமகிழ்வார் நேரில் வாழ்த்தும்
பதம்துதித்து அகமகிழ்ந்தோர் பகர்ந்த வாழ்த்தும்
பரவமுதம் உண்டுமகிழ் பாரோர் வாழ்த்தும்
சதம்கதித்தும் வாழ்வுதனைச் சகத்திற் காக்க
சைவப்பணி பலபுரிந்தே தரணி வாழி.

அருமறையும் வாழியாச் சார்யர் வாழி
அரசுநனி வாழியா னினமும் வாழி
குருமுறையும் வாழிபொழி மழையும் வாழி
குலவுபுண்ய நாச்சியவர் புகழும் வாழி
ஒருகுறையு மிலாதுயிர்கள் உலகில் வாழி
ஒண்தமிழும் வாழியா கமமும் வாழி
திருமுறையும் வாழிசிவ நெறியும் வாழி
திருப்பணிசெய் (இ)ராமநாதன் செழித்தே வாழி.

சுபம்

ஒன்றியம்' உருவாக்கப்பட வேண்டும்.

இப்பிரதேச ஒன்றியங்களை ஒன்றிணைக்கும் "மாவட்ட சைவக் கோயில்கள் உயர் ஒன்றியம்" உருவாக்கப்பட வேண்டும். இவைமூலம் கோயில்கள்யாவும் மேற்பார்வை செய்யப்பட்டு ஒழுங்கமைக்கப்படலாம். நீதிமன்றம் ஏறாமல் பிணக்குகள் யாவும் இவைமூலம் தீர்க்கப்படலாம். அத்தீர்ப்புகள் ஒன்றியம் உண்மையாக இயங்கினால் ஏற்கப்படும். இந்தக் கனவு நினைவாக வேண்டும். இவற்றின் மூலம் சைவ மக்களின் ஏகோபித்த குரல் ஓங்கி ஒலிக்க முடியும். எமக்கு வரும் அழுத்தங்களை அநியாயங்களை எதிர்கொண்டு வெற்றிபெற இத்தகைய ஒற்றுமை அவசியம். எனவே நாட்டின் - நம்மினத்தின் தலைவிதியை தீர்மானிக்க வேண்டிய இத்தருணத்தில் நாம் கோயில் கோயிலாக அணிதிரண்டு ஒன்றுபட்ட குரலில் எழுச்சிக்குரல் கொடுப்போம். உண்மையில் எமது பாடசாலைகள் அறிவுக்கோயில்கள். ஒவ்வொரு பாடசாலையிலும் 'சைவ மாணவர் மன்றம்' வலுவுள்ளதாக இருக்க வேண்டும். இந்த மன்றங்கள் வெறுமனே பூசைகள், திருநாள்களை கொண்டாடுவதோடு நிறுத்தாமல் புதிய செயற்பாடுகளைத் திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டும். ஒழுக்கம் தொடர்பான செயற்பாடுகளில் முன்னின்று முனைப்பட வழிவகுக்கவேண்டும். சமூக செயற்பாடுகளில் முன்னின்று உழைக்கவேண்டும். பாடசாலை மன்றங்கள் பாடசாலை ரீதியாகவும் ஒன்றிணைக்கப்பட்டு இயங்குவதற்கு ஆசிரியப் பெருந்தகைகள் வழிவகுக்க வேண்டும்.

# சைவ எழுச்சிக்கு இளைய தலைமுறையின் பங்களிப்பு

சைவத் தமிழ் மக்களின் மனதிலே பல கேள்விகள். எமது இளைய தலைமுறை எமது பண்பாட்டைச் சீர்குலைக்கின்றதா? தமிழுக்கும் சைவத்திற்கும் அவர்களது பங்களிப்பு என்ன? இக் கேள்விகளுக்கு விடைகளை ஆய்வு செய்து வரும்போது கிடைத்த தகவல்களும் செய்திகளும் சான்றுகளும் "இந்துசாதனம்" ஆய்வுக்குழுவை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. முதலாவது ஆய்வு இலங்கைச் சட்டக்கல்லூரி, கொழும்பு சட்ட மாணவர் இந்து மகாசபையின் பணிகள் குறிப்பிடத்தக்கவை.

(அ) 17.01.2004இல் அவர்கள் வெளியிட்ட "நக்கீரம் 2003" பாராட்டத்தக்கது.

(ஆ) யாழ்ப்பாண மாணவர்கள் சட்டக் கல்லூரி பிரவேசப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதற்காக யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு மாதமும் வழிகாட்டல் வகுப்பு நடத்திவருகின்றார்கள்.

# இருக்கிறதா?

நக்கீரம் இதழில் "கடவுள் கொள்கை" என்ற கட்டுரையில் சில முக்கியமான பகுதிகளை நாம் தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். **ஆரம்பநிலை ஆண்டு சட்டமாணவி செல்வி ஜெயதேவி சிவாநந்தன்** அவர்களின் கட்டுரை புதிய உற்சாகத்தை எம்மிடையே தோற்றுவிக்கின்றது. எமது இளைய சந்ததி சமயம் பற்றி ஆழ்ந்த அறிவும் ஈடுபாடும் கொண்டுள்ளதோடு ஆய்வு மனப்பாங்கில் எழுதும் ஆற்றலும் பெற்றிருப்பது இக் கட்டுரை மூலம் வெளிப்படுகின்றது.

- ஆசிரியர்.

இறைவனின் மேலான சக்தி மீது ஆஸ்திகர்கள் எந்தளவுக்கு அதீத நம்பிக்கை கொண்டுள்ளார்களோ, அந்தளவுக்கு நாஸ்திகர்கள் அவ நம்பிக்கை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். பொதுவாக நாஸ்திகர்களுக்கு மட்டுமல்ல ஆஸ்திகர்களுக்கும் கூட கடவுளின் மீது சில சமயங்களில் சந்தேகம் ஏற்பட தவறுவதில்லை. இதற்கு காரணம் மிக சிக்கலான தெய்வ கொள்கையை சரியாக புரிந்து கொள்ளாமையாகும்.

கண்ணுக்குப் புலப்படாத அரூபியாக இருப்பதனால்,

கடவுள் ஒருவர் இருக்கின்றாரா?

அவர் எங்கே இருக்கிறார்?

உலகமெங்கும் பரிபூரணமாக நிறைந்திருப்பவர் என்றால் பாவிகளிடத்தும் இருப்பாரா? உலகமெங்கும் பரிபூரணமாக நிறைந்திருப்பவர் என்றால் ஆலய வழிபாடு ஏன் அவசியமாகின்றது?

இந்த உலகம் எவ்வாறு தோன்றியது? ஏன் தோன்றியது? இதனை தோற்றுவித்தவர் யார்? உயிர்கள் எங்கிருந்து தோன்றின? ஏன் உயிர்கள் உடம்போடு சேர்ந்துகொண்டன? எவ்வாறு நாம் இந்த உலகத்தில் பிறவியெடுக்கிறோம்? வேறுபட்ட பிறவிகள் காணப்படுவது எதனால்?

போன்ற பல்வேறு தரப்பட்ட சிக்கலான வினாக்கள் எமது மூளையைக் கசக்கிக்கொண்டிருப்பதை நாம் அறிவோம். இவற்றுக்கு எமது சைவசமயம் மிக தெளிவான பதில்களை அளிக்கத் தவறவில்லை. தெய்வக் கொள்கை தொடர்பில் சைவசமயம் மிக பரந்து தெளிவானதுமான கோட்பாடுகளை விளக்கங்களை கொண்டிருக்கின்றது. இது எமது சமயம் மிகத் தொன்மையான வரலாறு உடையதாகவும் தொடர்ந்து நிலைபெறக் கூடியதாகவும் இருப்பதற்குக் காரணமாக அமைகின்றது.

ஆலம் வித்தினுள் காணப்படுகின்ற மிக நுண்ணியதான விதையினை மேலும் பிரித்துப் பார்ப்போமானால் அதனுள்ளே என்ன இருக்கிறது என வெற்றுக் கண்ணுக்கு புலப்படுவதில்லை. ஆனால் அதிலிருந்துதான் மிக பிரமாண்டமான ஆலமரம் தோன்றுகின்றது. கண்ணுக்கு புலப்படாத விதைக்குள்ளிருக்கும் நுண்ணிய பொருளே பின்பு மிகப் பிரமாண்டமான ஆலமரமாகக் காட்சியளிக்கின்றது.

# இல்லையா?

அவ்வாறே உலகம் முழுவதும் கண்ணுக்கு புலப்படாத பரம் பொருளிலிருந்து உண்டாகின்றது.

இறைவன் உலகெங்கும் வியாபித்திருப்பவர். நீருள் குளிர்ச்சிபோலவும், தீயில் சூடு போலவும், பூவின் மணம் போலவும் சகல ஆத்மாக்களினுள்ளும் கடவுள் உறைந்துள்ளார். ஆதலால் பாவிகளிடத்தும் கூட இருக்கிறார். ஆனால் பாவிகளிடத்தில் கடூரமாகிய முள்ளின் மேல் இருப்பது போலவும் நல்லோரிடத்தில் மெல்லிய பூவின் மீது இருப்பது போலவும் இருக்கிறார். நன்னீரில் உப்பிட்டு கலக்கிய பின்னர் அந் நன்னீர் முழுவதும் உப்பு கரிப்பதுபோல் இறைவனும் உலகம் முழுவது நிறைந்திருக்கிறார்.

மேலும் தெய்வம் இருப்பது கண்ணுக்குப் புலப்படாமையினால் அது பொய் என்ற எண்ணம் சில சமயங்களில் தோன்றலாம். கண் புறக்கண், அகக்கண்

என இரண்டு வகைப்படும்.

புறக்கண் என்பது முகத்தில் இருக்கும் கண்: அகக்கண் என்பது அறிவாகிய கண். புறக்கண்ணினால் இறைவனை நிஜ சொரூபமாக காணல் இயலாதது. ஆயினும் அகக்கண்ணினால் காணக்கூடியதாக இருப்பினும் பொதுவாக அனேகர் அஞ்ஞான இருளினால் ஆளப்பட்டு இருப்பதனால் அகக்கண்ணும் குருடாய் இருக்கிறது. அறிவாகிய தீபத்தை ஏற்றினால் அவர்களுக்கும் நிச்சயமாக கடவுளைக் கண்டு கொள்ள முடியும்.

இறைவன் எங்கும் வியாபித்து இருப்பவர்! எல்லாம் அறிபவர். இத்தகையவர் கல் முதலியவற்றால் அமைந்த நிலைகளில் எவ்வாறு இருப்பார் என்பது எம் மனதில் தோன்றல் இயல்பே. இதற்குரிய விளக்கமும் கொடுத்தல் இயலும். தயிர் நாம் எல்லோரும் அறிந்த பொருள். மோர் என்பதுவும் தெரிந்த ஒன்று. தயிரை மத்தாற் கடையும் போது வெண்ணெய் மிதக்கும். அதனை எடுத்த பின் எஞ்சுவது மோர். இந்த வெண்ணெய் என்பது பால் முழுவதும் பரவியிருக்கின்ற கொழுப்புச் சத்தாகும். எனினும் அதனைச் சாதாரணமாக பாலிலிருந்து பிரித்தெடுத்தல் ஆகாது. அவ்வாறே இறைவன் எங்கும் நிறைந்திருந்தாலும் அவர் அவ்வாறு உள்ளார் என்பதை நாம் உணர்வதில்லை. இதனால் சில இடங்களில் கடவுளை வழிபடல் அவசியமாகின்றது. இவ்விடங்களில் எல்லோரும் கடவுளின் சிந்தனையோடு வழிபடுவதனால், தயிரில் வெண்ணை போல், அங்கு திருவருட் செயல் வெளிப்படையாகப் புலப்படுகின்றது. இதனாலேயே கோயில்களை இறைவன் வீற்றிருக்கும் இடமாக கொள்கிறோம்.

சிவஞான போதத்தில்,

"ஆலயம் தானும் அரன் என தொழுமே"

எனக் குறிப்பிடப்படுகின்றது. அதாவது ஆலயத்தை∴ ஆலயத்தினுள் உள்ள இறைவனின் திருவருட் குறியை இறைவனாக வழிபட வேண்டும்.

இவ்வாறே உலகினதும் ஏனைய உயிர்களினதும் படைப்பு, பிறவிகள் மற்றும் வினைப் பயன்பற்றி தர்க்க முறையில் ஆராய்ந்து விடைகான முயன்றனர் பெரியோர். இதன் பயனாகக் கிடைத்ததே சித்தாந்தமாகும். இது மூவகை பொருள் பற்றிப் பேசுகின்றது. அவையாவன:

பதி : மூவகைப் பொருளிலும் மேலான பொருள் பதியாகும். இவர் சகுணக் கடவுளாகவும் நிர்குணக்கடவுளையும் விளங்குகிறார். ஆன்மாக்கள் சகுணக்கடவுளின் இலக்கணம் அறிந்து, வழிபாடு செய்து, நிர்க்குண கடவுளை உணர்ந்து கடைத்தேற வேண்டும். ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஐந்தொழில்களையும் செய்கிறார். மாயையை முதற் காரணமாக கொண்டு, சக்தியை துணைக்காரணமாக பெற்று தான் நிமித்தக் காரணமாக இருந்து காரியங்களை நடாத்துகிறார்.

பசு (உயிர்) : பசு எனும் சொல்லுக்கு பாசத்தால் கட்டுண்டது என பொருள் படும். அழிவில்லாதது இறைவன் அதற்கு உடம்பு முதலிய கருவியைக் கொடுத்து அறிவித்தாலன்றி அறியமாட்டாதன.

பாசம் : இதனை மலம் எனவும் குறிப்பிடலாம். இது 3 வகைப்படும் அவையாவன ஆணவம், கன்மம், மாயை. உயிர்களைக் கட்டி, கடவுளைச் சேரவிடாது தடுப்பதனால் பாசம் எனப்படும். இவை உயிர்களின் அறிவை மறைத்து அவற்றை பிரிவுத் துன்பத்துள் ஆழ்த்துபவை. இம் மூன்று மலங்களிலிருந்தும் உயிர் என்று விடபடுகின்றதோ அன்றுதான் அது முத்தியடையும்.

(அ) ஆணவம் : ஆணவம் என்பது அனுவாக்குவது எனப் பொருள்படும். உயிரை மயக்கி தீய வழியில் இட்டுச் செல்வது ஆன்மாவின் வல்லமையை தடுத்து அதன் அறிவை அனுவாக்குகிறது. இதனால் இறைவனின் திருவருளை அறியாதவராகின்றோம். உயிரானது இறைவனைப் பற்றி நிற்கும் முத்தி நிலை அடையும் வரை, அது செம்பிற்களிம்பாக உயிருடன் அநாதியாய் சேர்ந்திருக்கும். முத்தி நிலையில் திருவருள் உயிரிலே பிரகாஷிப்பதனால் ஆணவம் அதனது வலிமையை இழந்துவிடும்.

உண்மையில் ஆணவம், திருவருள் இரண்டுமே தம்வகை பொருளைக் காட்டி ஏனையவற்றை மறைக்கும் இயல்பின. எனினும் திருவருளானது தன்னை அடைந்தார்க்கு உண்மைப் பொருளை உணர்த்தும் மாறாக ஆணவமானது தன்னை நீங்காதாருக்கு மெய்ப் பொருளை விளக்கும்.

(ஆ) கன்மம் : ஆணவத்தினால் உயிர்களால் செய்யப்படுபவை.

(இ) மாயை : கன்மத்தைச் செய்வதற்குக் கருவியாய் இருக்கும் உடம்பு. உயிர்கள் தம்மைப் பீடித்துள்ள ஆணவ மலத்தை நீக்கி, முக்தி இன்பத்தைப் பெற இறைவன் இவற்றுக்கு தனு, கரண, புவன போகங்களை ஆக்கிக் கொடுக்கின்றான்.

தனு, கரண, புலன போகங்கள் எனப்படுபவை ஆன்மாக்களின் வினைப் பயன்களை அனுபவிக்கச் செய்து, அவ் அனுபவத்தினால் ஆணவத்தின் வலிமையை குறைக்க உதவுவனவாகும்.

ஆணவத்தில் இருந்து உயிர்களை விடுவிப்பதற்காக இறைவன் உடம்பைக் கொடுக்கிறான். இந்த உடம்பின் துணை கொண்டு நாம் பல வினைகளை செய்கிறோம். இவ்வினைகளே கன்மங்கள் ஆகும். இது இருவினை, வெறுவினை என வகைப்படும்.

(1) வெறுவினை : இது நல்வினை, தீவினை என்ற வகையில் சாராது.

உதாரணம் :- உணவு சமைத்தல்

(2) இருவினை : இவையே எமது சமயமுறைப்படி கன்மம் எனப்படும்.

நல்வினை : ஆணவத்தை அடக்கி செய்யப்படும் வினை.

தீவினை : ஆணவத்திற்கு அடங்கி செய்யப்படும் வினை.

நாம் செய்கின்ற ஒவ்வொரு வினைக்கும் பலன் உண்டு. அது செய்து முடித்த உடனோ காலம் தாழ்த்தியோ கிடைக்கும். நல்வினையின் பயன் இன்பமாயும் தீவினையின் பயன் துன்பமாயும் அமையும். பொதுவில் கன்மமானது 3 வகைப்படும்.

(1) பிரார்த்த கன்மம் : பழவினைத் தொகுதியில் இப்பிறப்பில் அனுபவிக்கப்படுபவை. பிரார்த்த கன்மத்தால் வரும் துன்பங்கள் மூன்று வகைப்படும்.

(அ) ஆதிதை விதம் : தெய்வம் காரணமாக வரும் துன்பங்கள்.

(ஆ) ஆதி பௌதீகம் : சூடு, குளிர், காற்றால் ஏற்படும் துன்பங்கள்.

(இ) ஆத்தியான்மிகம் : நோய், கள்வர், விலங்கால் ஏற்படுவது.

(2) ஆகாமிய கன்மம் : அனுபவிக்கும் போது நாம் இப்பிறப்பில் புதிதாக செய்யும் வினை.

(அ) திருட்டம் : செய்யப்படும் பிறவியிலேயே பயனை கொடுப்பது.

(ஆ) அதிருட்டம் : செய்த பிறவியிலே பயனைக் கொடாதது.

(இ) திருட்டா திருட்டம் : செய்த பிறவியிலும் மறு பிறவியிலும் பயனைக் கொடுப்பது.

(3) சஞ்சித கன்மம் : ஆன்மாக்களால் செய்யப்படாமல் எஞ்சியிருக்கும் வினை.

இனி உயிர்கள் எதற்காக பிறவி எடுக்கின்றன என நோக்குவோமானால், உயிர்களைப் பீடித்துள்ள இருளாகிய ஆணவ மலத்தை போக்குவதற்காக இறைவன் அவைகளுக்கு பிறவிகளைக் கொடுக்கின்றான். பிறவி எடுத்த உயிர்கள் வினைகளைச் செய்கின்றன. இவ்வினைகள் உயிர்களை சேர்த்து நிற்கின்றன. இறைவனுடைய ஆணையால் அவற்றை அனுபவித்து தீர்ப்பதற்காகவும் மலங்களிலிருந்து முழுவதுமாக விடுபட்டு முத்தியடையும் வரை, இரு வினை பயன்களுக்கும் ஏற்றவாறு, மாறி மாறி பிறவியெடுக்கின்றன.

எல்லாம் வல்ல இறைவன் படைப்பில் எத்தனையோ லட்சம் ஜீவராசிகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான சரீர அமைப்பும், வெவ்வேறு விதமான செயற்பாடுகளும் பல்வேறு விதமான கோரிக்கைகளும், தகுந்த முயற்சிகளும், முரண்பாடுகளும் உள்ளன.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா ஆநின்ற இத் தாவர சங்கமத்துள்"

என்பதன் மூலமாக மாணிக்க வாசகர் பல் பிறப்புகளைப் பற்றிக் கூறியுள்ளார்.

இந்தப்படைப்பு ஒன்றுக்கொன்று இவ்வளவு வித்தியாசமாய் இருக்கக் காரணம் என்ன? இதற்குக் காரணம் அந்த ஆத்மா செய்த முன்வினையே என்பர் பெரியோர்.

பூர்வஜென்ம கர்மம் என்பது புண்ணிய ரூபமாகவும் பாவ ரூபமாகவும் இருக்கும். ஒவ்வொருவரும் தன் வாழ்நாள் முழுவதும் புண்ணியம் மாத்திரமோ, பாவம் மாத்திரமோ, தனித்தனியாகச் செய்திருக்க மாட்டான். மிகுந்த புண்ணியவானும் கூட, தனக்குத் தெரியாமலேயே ஏதாவது பாவம் செய்திருக்கலாம்.

ஆகையால் ஒருவன் முன் ஜென்மத்தில் செய்த புண்ணியத்தையும் பாவத்தையும் அனுபவிப்பதற்காகவே மறுபடியும் ஜென்மம் எடுக்கிறான் என்பது நியதி.

அவரவர் செய்துள்ள தீவினையின் பயனாக கஷ்டப்படுபவர்கள் அறிவிழந்து ஆண்டவனை நோகின்றனர். இவர்களின் அறிவீனத்தை ஔவையார்,

"செய்த வினையிருக்க தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இரு நிதியம்? வையத்து
அறும்பாவம் யாவும் என்ன வறித்தன் றிடார்க்கின்று
அறும்பானை வொங்குமோ மேல்?"

என்று கேலி செய்துள்ளார்.

பூர்வ ஜென்ம வினையே என உணர்ந்து தன்னால் இயன்றளவு நற்காரியங்கள் செய்தல் வேண்டும் என்பது அவசியமாகும். ஏனைய அனைத்துப் பிறவிகளை காட்டிலும் மனிதப் பிறவியிலேயே உயிர்கள் தம்மையும் தலைவனையும் அறிந்து முத்தி பெறமுடியும்.

நல்வினைப் பயனாக தேவராய் பிறந்தவரும், முத்தி பெற வேண்டுமானால், மனிதராகப் பிறக்க வேண்டும். என சிவஞான சித்தியார் கூறுவது

"வானிடத்தவரு மண்மேல் வந்தரன்றனையாச்சியப்பர்-"

பேரின்பமாகிய முத்தியை அடைந்தோரும், அம் முத்தியை அடைதற்கு காரணமாகிய சமாதியை அடைந்தோரும், ஞான நிலையை அடைந்தோரும் பிறவி எடுக்க மாட்டார்கள். மேலும் பூர்வ ஜென்மத்தில் செய்த பாவத்திற்கு இந்தப் பிறப்பில் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியது நியதியானாலும், இறைவனைச் சார்ந்திருந்தால், அவற்றைக் குறைக்கும் ஆற்றலையும் இறைவன் அருளிச் செய்துள்ளார்.

இதுவே சைவ சமயக் கடவுள் கொள்கையாகும். எனவே சைவசமய தத்துவங்களையும் விழுமியங்களையும் அறிந்து, அதனைத் தொடர்ந்து இவ்வுலகில் நிலை பெறச்செய்தல் எம்மவர் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்பதை அனைவரும் உணர்ந்து அவற்றை பின்பற்றி நிலையான பேரின்பமாகிய முத்தியை பெற முயல்வோமாக!

உ



# THE HINDU ORGAN

FEBRUARY - MARCH 2004

## Hindu Revival

- C.S.Navaratnam

Now to return to events in Ceylon, two successive foreign governments the Portuguese and the Dutch during the sixteenth, seventeenth and eighteenth centuries had smothered the vestiges of our national life and culture. The former had demolished all Hindu temples and robbed them of their wealth. During their period they abolished all forms of Hindu worship in public, and compelled all Hindus to attend their churches. Every "pagan" was looked upon as an enemy of Portugual and Jesus. Their barbarity, their cruelty and their rapacity prejudiced the people against a11 Europeans who came to rule Ceylon after them. Had not the Portuguese destroyed the temple of Berendi Kovil near Sitawaka it would have been a venerable piece of Dravidian architecture in Ceylon.. The wanton destruction and desecration of the temple of Vishnu at Dondra can only 6e compared to the senseless vandalism of the early Huns. Though externals of religion were ruthlessly suppressed by a government with new ideologies, yet as religion is a thing of the spirit it had to go underground for a time. It lived in the innermost hearts

Now to return to events of men. The light in the jewel-chamber of the heart can never be extinguished. Such was the case in Ceylon when the Portuguese ruled over this country. There was a spiritual blackout in the regions they governed yet Hinduism survived. Luckihr their rule lasted for a short time and ended in 1658.

The Dutch who followed the Portuguese more or less followed the same policy of their predecessors with regard to the native religions. They made use of education for purposes of proselytism. Education and Christianity went hand in hand during their period. While children received elementary education, the adults were taught the doctrines of Christianity. Under them nobody was given employment, unless he professed the Christian faith. Though this was the general policy in Ceylon their latter period saw little tolerance towards the native faiths. The mental sufferings of our people during this period can best be gauged from the lives of two of our most distinguished citizens who lived during this period. The first was Gnanapiragasa Munivar of Tirunelvely a highly cultured gentleman of no mean order. He was one of the forbears of Sri la Sri Arumuga Navalar. The Dutch Government in those days enforced that men of means should supply cattle to their slaughter-houses in turns. But Gnanapiragasar was not a man who would do things against his conscience and the tenets of his religion. Before he got his turn for the supplying cattle, he left Jaffna his native country for good and settled at Chidambaram..Then he joined the Sanskrit College at Gour in Bengal for his higher studies. There he finished the study of Vedagamas before he was invested with his robes of a Sannyasin at $anaras. Later he became the Head of the Tiruvannamalai Athenam, and wrote many commentaries Sanskrit and Tamil for many Saiva Siddhananta works. He also built a Tirukulam '.for the Chidambaram temple and it is today known as Gnanapiragasam.'

The . other eminent gentleman was Shanmuganayaga Mudaliyar of Navaly a descendant of the royal house of Jaffna, and held the highest native rank and appointment at that time under the Dutch Govrnment, in North Ceylon. He was once called upon to sign a licence for the slaughtering of cattle. This hestoutly declined to do. He did not want to do a mean and irreligious act to please his superiors. He therefore, tendered his resignation thereby sacrificing his position and all emoluments.' Such were the type of men Jaffna produced in the seventeenth and eighteenth centuries.

In 1787, Vaithilinga Chettiyar, a wealthy gentleman and one who commanded great influence with the government, dedicated a temple to Lord Siva at Vannarponnai. Soon after, the Nallur Kandaswamy temple was built. When

'the British became the rulers of the Island -in 1796, they allowed full freedom of public worship. Many Tamil leaders took this opportunity to found temples to various deities in many parts of the country. It was only the coming of the British that saved the native religions and gave new life to their culture. Everything in this world can decay but not religious faith, for when it decays all other life. giving creative instincts in man also die. The body becomes the grave of the soul. Life becomes a lost stream in the desert.

The British government while professing neuraliry in religious matters entrusted the education of the country to missionary societies in te of the fact that governments were also the todians of the native cultures of a people. For that time the Church helped the Empire in its ansion, and the Empire helped the Church its development. In the early British period a tion of the government Revenue was allocated the Church and its activities. One was depent on the other. Moreover, it becomes easy for

imperial governments to administer their colonies, when the natives adopt the faith of their masters. Proselytizing non-Christian children in schools by holding out to them the' bait of secular education was part of the system of evangelization of some missions. As regards his own mission, Jesus Christ said: " I am not come to destroy but to fulfil ." But Bishop Copleston one of the foremost divines who lived in Ceylon said in a Christian. conference in Calcutta, referring to Buddhist children who attended his schools in Ceylon "I cannot guarantee they will all be genuine Christians but I can guarantee they will never be genuine Buddhists." Should Jesus, the Prince of Peace, come back he would persuade Buddhists to be better Buddhists and Hindus to be better Hindus for his purpose is to fulfil and not to destroy. If Christian missions find filth and dirt in the house of non-Christians let them if they wish, help the owner to cleanse them; let them not pull down the house without the owner's consent. They little understand what pain of mind they cause to patriotic Buddhists and Hindus.

Tamils in Ceylon in the nineteenth century had already drifted from their traditional moorings. There were at that time many impediments for Hindus to provide themselves with schools of their own. The non-Christian children had no other choice but to attend Christian schools for their education Thus generally speaking English and vernacular education throughout the nineteenth century, were in the hands of foreign missionaries. The Tamil provinces became the seat of intense educational and missionary activity and the Tamils were quick to take advantage of these facilities. As a result the Tamil provinces during the Nineteenth and early twentieth centuries produced emimnent men in all branches of learning just as in India English education opened the eyes of the Hindus it made the Hindus of Ceylon to set their house in order.

Freedom of thought, freedom of worship and feedom of expression had gone a great way to quicken the development of the Tamil language. This was given an impetus by the introduction of the printing press into Jaffna. Poetry had always been considered the best medium for the creative works of great Tamil writers, but in the nineteenth century, prose became a powerful medium to make attacks on Christinity and Christian activity. Writers of this categort were Sri la Sri Arumuga Navalar (1822-1879) Sankara, pandithar (1821-1891), Muttukumara I<avirayar (1780 1851), V. Thamotharampillai (1832-1901} and Sabapathy Navalar (1843-1903).

When irreligion and denationalization were fast becoming the order of the day Sri la Sri Arumuga Navalar, scholar, patriot, social reformer, a born fighter and a coi,summate master of debate appeared on the scene and by his clarion call summoned his pe~}p1e back to their national way of life. For more than thirty years he carried on a vigorous campaign for the growth and development of Saivism both in India and Ceylon. He criticized the proselytizing work of Christian missionaries and extolled the greatness of Saivism. Societies for the propagation of Saivism were started. Newspapers, tracts and pamphlets were also established. He published and schools were declared that education without the religious and cultural background of the child was not Worthy of the name education. The movement he set afoot rapidly began to spread throughout the length and breadth of the Tamil country, and it reached its peak after his death in 1879.

Navalar not only established schools in Jaffna and Chidambaram, but also put up printing presses to carry on his work in Jaffna and Madras. His two prose renderings of Periyapuranam and Tiruvilaiyadalpuranam are excellent books for all time. Besides Srila Sri Arumuga Navalar was an editor of Tamil classics. His works are marked for their accuracy. He was a great Sanskrit scholar and his commentaries on religious works are famous throughout the Tamil country. His graded "Palapadams" are a treasury of our religous traditions. He was the greatest prose writer of the nineteenth century and is rightly called father of Tamil prose. He set afoot a movement which had for its objective the revival of Hindu culture.

Once in 1884, Sir Ponnampalam Ramanathan then Hon. Mr. P Ramanathan spoke in the Legistarive Council on the religious intolerance

of certain Christian cnissionary manof

agers grant-in-aid schools in the Northern Province as follows: " Hindu boys who for want of their own English schools, resort to missionary schools, have learnt to make mental reservations and are getring skilled in the art of dodging. The holy ashes put on at home during worship are carefully rubbed off as they approach the Christian schools and they affect the methods of Christian boys while at school. I know of many cases in which even baptized boys and teachers when they cease to connected with such schools appear in their true colours with broad stripes of consecrated ashes and rosaries to the great merriment of the people and the deep chagrin of the missionaries, There is a great deal too much of hypocrisy i

Jaffna in the matter of religion, owing to the fathat the love of the missionaries for proselytes as boundless as the love of the Jaffnese to obtai some knowledge of English any cost."

Nations become great when people's min are rich and fertile; when these become feeble barren their creative instinct declines. We ha paid homage to the culture of our rulers and alized that the elemental necessities of life not be procured without some degree of cu subservience. The price we have paid is stu dous. Many of us have become followers of ern ideals and western thoughts. It is not our for we are the products of alien institutions.

Hindus of the present generation have no idea of the indignities to which Hindu boys were subjected in mission schools, before the establishment of the Jaffna Hindu College and other sister institutions. Hindu students had to attend Christian Sunday meetings and Bible classes. Sometimes in these classes there were open vilification of Hindu deities, and distorted versions of Hindu doctrines.

Under these circumstances, the educated Hindus of the Country could not stand aloof and see unmoved our youths getting demoralized by such hypocritical feeling. One of the few men who came under the influence of Navalar was S. Nagalingam an eminent lawyer, patriot and benefactor of his people. His name deserves to be remembered by all Hindus of Ceylon, for he delivered his countrymen from the helpless condition of servility to foreign Christian missions in the matter of education. The other was S. T. M. Pasupathy Chettiyar, a dynamic personality and a force to reckon with in his day. These two men led and directed the movements which have brought about the establishment of the Saiva Paripalana Sabai, the Hindu organ and the Jaffna Hindu College.

The Saiva Paripalana Sabai was started in 1888 about 8 1/2 years after the demise of Sri la Sri Arumuga navalar by his nephews N. S. Ponnampalampillai and T.Kailasapillai to continue the great educational and religious work commenced by the illustrious Navalar. In the second year of the Sabai's existence Pasupathy Cettiyar, Advocate Nagalingam, Procter Casipillai and T Chellappahpillai, retired Chief Justice of Travancore began to take an abiding interest in the activities the Sabai.

The leader of this galaxy of patriots was Chellappahpillai, an erudite scholar, author, an eminent jurist and a gentleman of high culture and vast information. He was a mathematician and his favourite study was Astronomy. He was of great service to Hindu calendar-makers. His contribution to the cause of Hindu revival in Ceylon is worthy of special mention. For nine years he was the president of the Saiva Paripalana Sabai from its very inception until his death in 1902. His was the first name in the Hindu College Board of Directors. He it was who wanted a paper to be established to watch the intersts of the Hindus. He was the first editor of the Hindu Organ. He was the president for the reception given to Swami Vivekananda in Jaffna on his visit 1897.

The Jaffna Hindu College was established by the Saiva Paripalana Sabai in 1890. The founding of the College was the fulfilment of the literarv and religous revival started by Navalar. Its purpose was to preach the gospel of Saiva Bhakti, love and service. Mudaliyar P Kumaraswamy, the illustrious elder brother of Sir Ponnampalarn Ramanathan, was an active participant in the movement that gave birth to the Jaffna Hindu College. He was mainly instrumental in overcoming barriers which then appeared insurmountable and which stood in the path of the school's registration for a grant. Nevins Selvadurai was the first principal of the College and under him it developed into a first grade. institution in the North. Soon other Hindu schools were established in all parts of the country by patriotic men and women.

In 1889 the Hindu Organ was started and it was soon followed by the Tamil paper "Inthusathanam". Both were started as weekly papers. These two papers wielded tremendous influence in the past. Hon. A. Sabapathy was the honorary co-editor of the Hindu Organ from 18)1-1913, and was its honorary chief editor from 1913- 1924. In no part of Ceylon was there a man like him who performed an honorary job continuously for thirty four years. He sacrificed his time and energy for the sake of his religion. After the death of V Casipillai, he was made the manager of the Jaffna Hindu College. He espoused many public causes and did things without much fuss. He belongs to the great band of Tamil patriots who worked ceaselessly for Hindu revival in Ceylon.

இப்பத்திரிகை சைவபரிபாலன சபையினருக்காக இ. மகேந்திரன் அவர்களால் 450, கே. கே. எஸ். வீதியில் உள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# சைவ மகாநாடு

மாசி 22ந்திகதி 05.03.2004 வெள்ளிக்கிழமை

## 1ம் நாள் காலை நிகழ்ச்சிகள்

காலை

08.00 மணி : வண்ணை சிவன் கோவிலில் வழிபாடு

08.30 மணி : சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பூஜை

08.40 மணி : திருமுறை ஓதல், யாழ் இந்துக்கல்லூரி மாணவர்

**தலைமை**

**பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர்** அவர்கள்

**(கலைப்பீடாதிபதி யாழ் பல்கலைக்கழகம்)**

மு.ப. 09.00 மணி : புராணபடனம் :

பண்டிதர் வ.பேரின்பநாயகம்

திரு.செ.தியாகராசா

10.00 மணி : அருளுரை :

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்)

10.15 மணி : வாழ்த்துரை :

சிவஸ்ரீ க.கிருபானந்தக்குருக்கள்

(தலைவர், அகில இலங்கை சைவக்குருமார், அர்ச்சகர்சபை)

10.30 மணி : வரவேற்புரை:

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்

(சமயப்பிரசார அமைச்சர், சைவபரிபாலன சபை)

10.45 மணி : தலைமையுரை

11.00 மணி : விரிவுரை

1. "கந்தபுராணத்தில் பக்திக் கோட்பாடு"
கலாநிதி ம.வேதநாதன்
(விரிவுரையாளர் இந்துநாகரிகத்துறை யாழ்பல்கலைக்கழகம்)
2. "திருக்கோயில்களில் திருமுறை"
சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
(உதவிப்பணிப்பாளர் இந்துசமய விவகாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்)

12.00 மணி : பட்டமளிப்பு - சான்றிதழ் வழங்கல்

2003ம் ஆண்டு சைவசித்தாந்த பிரவேச, பாலபண்டித, பண்டிதர் தேர்வில் சித்திபெற்றவர்களுக்கு.

12.30 மணி : தேவாரம் :

சங்கீதபூஷணம் இ.நடராசா

## 1ம் நாள் மாலை நிகழ்ச்சிகள்

**தலைவர் :**

**திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்** அவர்கள்

**(முன்னாள் விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை)**

பி.ப. 2.30 மணி : திருமுறை ஓதல் :

யாழ் இந்துமகளிர் கல்லூரி மாணவிகள்

2.45 மணி : தலைமையுரை

3.00 மணி : கருத்துரை

தலைப்பு : "சைவசமயக் கல்வியில் பெண்கள் பங்கு"

வழங்குவோர் : திருமதி பண்டிதை பொன்.பாக்கியம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

திருமதி நாச்சியார் செல்வநாயகம்

(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

திருமதி மனோன்மணி சண்முகதாஸ்

(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)

4.30 மணி : தமிழோடிசைபாடல் :

யாழ் இந்துமகளிர் கல்லூரி மாணவிகள்

5.00 மணி : கதாப்பிரசங்கம் :

"வள்ளி திருமணம்"

கலாபூஷணம், பிரசங்கபூஷணம்

திரு.ந.சிவசண்முகமூர்த்தி அவர்கள்

(சிறந்த பக்கவாத்தியங்களுடன் நடத்துவார்)

6.30 மணி : நன்றியுரை :

திரு.இ.குகதாசன்

(உபதலைவர், சைவபரிபாலன சபை)

6.45 மணி : தேவாரம்.

மாசி 23ந்திகதி 06.03.2004 சனிக்கிழமை

## 2ம் நாள் காலை நிகழ்ச்சிகள்

**தலைவர் :**

**பேராசிரியர் இ.குமாரவடிவேல்** அவர்கள்

**(விஞ்ஞானபீடாதிபதி யாழ் பல்கலைக்கழகம்)**

மு.ப. 09.30 மணி : திருமுறைஓதல் :

யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை மாணவிகள்

09.45 மணி : தலைமையுரை

10.15 மணி : விரிவுரைகள்

1. "21ம் நூற்றாண்டில் சைவப்பாடசாலைகளில் சைவம்"
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
(ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
2. "21ம் நூற்றாண்டில் சைவஆலயங்களின் பரிபாலனம்"
சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்
(நிர்வாகசபை உறுப்பினர், சைவபரிபாலனசபை)
3. "21ம் நூற்றாண்டில் சைவசமயச் சடங்குகளின் நிலை"
சைவப்புலவர் கலாபூஷணம் சு.செல்லத்துரை
(உபதலைவர், சைவபரிபாலனசபை)

11.45 மணி : பண்ணொன்ற இசைபாடல் :

யாழ் வேம்படிமகளிர் உயர்தர பாடசாலை மாணவிகள்

12.30 மணி : தேவாரம்.

## 2ம் நாள் மாலை நிகழ்ச்சிகள்

**தலைவர் :**

**திரு.இ.மகேந்திரன்** அவர்கள்

**(பத்திராதிபர் "இந்துசாதனம்", நிருவாகசபை உறுப்பினர்)**

பி.ப. 2.30 மணி : திருமுறை ஓதல் :

கோப்பாய் ஆசிரியர்கலாசாலை மாணவர்

2.45 மணி : தலைமையுரை

3.00 மணி : கருத்தரங்கு

தலைப்பு : "சைவத்தின் வளர்ச்சியில் இன்றைய - இளைஞர்களின் பங்களிப்பு"

வழங்குவோர் : யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற்கல்லூரி முகிழ்நிலை மாணவர்.

1. கோயிற்கிரியைச் செயற்பாடுகளில் -
சண்முகலிங்கம் முகுந்தன்
2. விழுமியபண்புகளைப் பேணி மதித்தலில் -
பரராஜசிங்கம் சசிதரன்
3. சைவநிறுவனங்களின் ஆக்கச்செயற்பாடுகளில் -
கருணாமூர்த்தி பத்மகாந்தன்
4. சைவ நடைமுறைகளைப் பின்பற்றுவதில் -
சிவதாசன் சந்திரசுபநேமி
5. பண்பாடு கலாச்சாரங்களைப் பேணுவதில் -
கந்தராசா கெங்காதரன்.

5.00 மணி : தமிழோடிசைபாடல் :

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர்

5.45 மணி : வில்லிசை :"நாவாரப்பாடும் தேவாரம்"

சிவநெறிக் கலாநிதி - சைவப்புலவர் கவிமணி

**இராசையாஸ்ரீதரன் வில்லிசைக்குழுவினர்.**

6.30 மணி : நன்றியுரை : திரு.இ.தவகோபால்

(துணைச் செயலாளர், சைவபரிபாலன சபை)

6.45 மணி : தேவாரம்.

மாசி 24ந்திகதி 07.03.2004 ஞாயிற்றுக்கிழமை

## 3ம் நாள் காலை நிகழ்ச்சிகள்

**தலைவர் :**

**திரு.க.சிவராமலிங்கம்** அவர்கள்

**(இளைப்பாறிய பிரதிஅதிபர், யாழ் இந்துக் கல்லூரி)**

மு.ப. 09.30 மணி : திருமுறைஓதல் :

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்

09.45 மணி : தலைமையுரை

10.00 மணி : விரிவுரைகள்

1. "திருநெறியதமிழ்"
சைவப்புலவர் ஏரம்பமூர்த்தி அனுசாந்தன்
(ஆசிரியர், அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை)
2. "திருமுறைகாட்டும் வாழ்வு"
பண்டிதர் வ.பேரின்பநாயகம்
(தலைவர், அகில இலங்கைத் திருமுறைமன்றம்)

11.15 மணி : "கரகம்" :

யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்

12.00 மணி : தமிழோடிசைபாடல் :

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்

12.30 மணி : தேவாரம்.